# தொலைக்காட்சி / இணையம் / தொலைபேசி

இணையம் தொலைபேசி மற்றும் கேபிள் - தொலைக்காட்சி என்பன பலவகையான வழங்குநர்களால் வழங்கப்படுகின்றன. அனேகமாக அதிக குடியிருப்பாளர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சிக்கட்டணம் கட்டவேண்டியுள்ளது.

## வானொலி -மற்றும் தொலைக்காட்சிக்கட்டணங்கள்

அடிப்படையில், சுவிட்சர்லாந்தில் உள்ள அனைத்து குடும்பங்களும் சாதனம் சாராத வானொலி மற்றும் தொலைக்காட்சி கட்டணத்தைச் (Radio- und Fernsehgebühren) செலுத்த வேண்டும். இந்தச் சட்டப்படியான கட்டணங்கள் தான் பகிரங்க - சட்டபூர்வமான சுவிஸ் வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் (SRG SSR) போன்ற தனிப்பட்ட வானொலி -மற்றும் தொலைக்காட்சிகளுக்கும் ஆதரவு வழங்குகின்றன. இந்தக் கட்டணங்களை அறவிடுவதற்கு serafe நிறுவனம் பொறுப்பாகவுள்ளது. ஆண்டுதோறும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மேலதிகப் பொருளாதார உதவி பெறுபவர்கள் இந்தக் கட்டணங்கள் கட்டத்தேவையில்லை.

## தொலைபேசி இணையம் கேபிள் - தொலைக்காட்சி

சுவிஸில் தொலைபேசி இணையம் மற்றும் கேபிள் -தொலைக்காட்சியை வழங்குவதற்கு பலவகையான வழங்குநர்கள் உள்ளனர். சிலர் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கு மட்டுமே செயற்படுகிறார்கள். சிலவேளை குறிக்கப்பட்ட இடத்திலோ அன்றி குறிக்கப்பட்ட வீட்டிலோ வசிப்பவர்கள் ஒரு வசதியை மட்டும் தான் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கலாம்.வித்தியாசமான வசதி வாய்ப்புகளையும் விலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது. ஒரு சற்றலைற் கோப்பையைப் பூட்ட விரும்பினால் முதலில் வீட்டுரிமையாளருடன் பேசி அல்லது அயலவருடனும் சொல்லவேண்டும். வீட்டிலுள்ள இணையத்தொடர்பு மிகவும் விரைவானது. ஒவ்வொரு வீட்டிலும் இணையத்தொடர்பு இருப்பதால் இணையக்கஃபே. இருப்பது குறைவு.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/housing/tv--internet--telephone